


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 05.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்
- புத்தகங்கள்

We Shine Academy™

# இந்திய நிகழ்வுகள்

- கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் **நகரங்களை நோக்கி இடம்பெயர்வதை தடுப்பதற்காகவும்,** அவர்களுக்கு வேளாண்மையில் ஈடுபாடு அதிகரிப்பதற்காகவும், **இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் மாயா (MAYA – Motivating and Attracting Youth in Agriculture)** என்ற பெயரில் ஆராய்ச்சி ஒன்றை நடத்த உள்ளது.

- நாட்டில் உள்ள **அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் குடிநீர், தூய்மை, சுகாதாரம்** ஆகியவற்றை மையமாகக் கொண்டு **2016 - 2017ம்** கல்வி ஆண்டு முதல் - **தேசிய, மாநில அளவில் தூய்மை பள்ளி விருது** (ஸ்வத் வித்யாலயா) **மத்திய மனிதவள மேம்பாட்டு சார்பில் வழங்கப்பட்டு வருகிறது**.
    - 2017 – 2018ம் கல்வி ஆண்டில் தேசிய அளவில் விருது பெற **52 பள்ளிகள் தேர்வு** செய்யப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் **புதுச்சேரி கூனிச்சம்பட்டு அரசு தொடக்கப்பள்ளி 100 சதவீத புள்ளிகள்** பெற்று **நாட்டிலேயே முதலிடம்** பிடித்துள்ளது.

# உலக நிகழ்வுகள்

- **சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு** ஐக்கிய அரபு அமீரகம் சார்பில் **முதல் முறையாக இரண்டு வீரர்கள்** அனுப்பப்பட உள்ளனர். அவர்களது பெயர்கள் பின்வருமாறு:
    - **ஹஸ்ஸா அல் மசூரி** மற்றும் **சுல்தான் அல் நேயாதி** ஆகிய இரு வீரர்களும் விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ளனர்.
- **குறிப்பு**
    - செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக **Hope Mars Mission** என்ற பெயரிலான திட்டம் **2021ம் ஆண்டுக்குள்** செயல்படுத்தப்படும் என **UAE அறிவித்துள்ளது**.

- **சர்வதேச மகளிர் தொழில் முனைவோர் உச்சி மாநாடு - 2018**, நேபாளத்தின் தலைநகர் **காத்மண்டுவில் செப்டம்பர் 03 முதல் செப்டம்பர் 05 வரை** நடைபெற்றுள்ளது.
  - இம்மாநாட்டின் கருத்துரு: சமத்துவம் பொருளாதார ஆற்றல் மூலம் தொடங்குகிறது **(Equality begins with Economic Empowerment)**

- **பாகிஸ்தான் அதிபர் மம்னூன் ஹீசைனான் பதவிக்காலம் முடிவுக்கு** வருவதையொட்டி **புதிய அதிபருக்கான தேர்தல் செப்டம்பர் 04** நடைபெற்றது.
  - இதில் பாகிஸ்தான் **தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி** சார்பில் போட்டியிட்ட **ஆரிப்-உர்-ரஹ்மான்-ஆல்லி 13வது அதிபராக** பொறுப்பேற்க உள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **பேரிடர் மேலாண்மைக்கு** பெரிதும் பயன்படும் வகையில் **வடதுருவத்தில்** தனது முதல் **அயல்நாட்டு ஆய்வுக் கூடத்தை** இஸ்ரோ அமைக்க உள்ளது.
  - இந்தியன் தொலை உணர்வு திறன் செயல்பாடுகளை இதன் மூலம் அதிகரிக்க முடியும்
- குறிப்பு
  - பல்வேறு செயற்கை கோள்களின் தகவல்களைப் பெற்று செயல்படும் தேசிய தொலை உணர்வு மையம் ஹைதராபாத்தில் உள்ளது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05**
  - இந்தியாவின் **முன்னாள் குடியரசுத் தலைவரான டாக்டர். ராதா கிருஷ்ணனின்** பிறந்த நாளான **செப்டம்பர் 5ம் தேதி** நாடு

முழுவதும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

- **இந்தியாவில் 1962ம் ஆண்டு முதல்** ஒவ்வொரு வருடமும் **செப்டம்பர் 05ம் தேதி ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது**.

## புத்தகங்கள்

- தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் **Exam Warriors** என்ற பெயரில் **பிரதமர் நரேந்திர மோடி புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்.**
  - இப்புத்தகத்தை தமிழில், **வி. இன்சுவை** என்பவர் **'பரீட்சைக்கு பயமேன்'** என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.
  - இப்புத்தக்தை **ஆளுநர் பன்வாரிலால் புரோகித் வெளியிட தமிழக முதல்வர் பெற்றுக் கொண்டார்**.